தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6
முன்னிலை : முனைவர்.ச.கண்ணப்பன்

ந.க.எண். 31070 /அ1 /இ1 / 2019 நாள். 24.08.2020

பொருள் : தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணி– அரசு உயர்நிலைப்பள்ளி/ அரசு மேனிலைப் பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் அதனையொத்த பணிநிலையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த பணியிடங்களில் தற்காலிக அடிப்படையில் பதவி உயர்வு / பணி மாறுதல் அளித்தல் –சார்ந்து.

பார்வை : அரசாணை (நிலை) எண். 72 பள்ளிக் கல்வி (ப.க–1(1)) துறை, நாள். 24.08.2020

---

தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணியின் கீழுள்ள, வகுப்பு IV-ஐ சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த பணியிடங்களுக்கு கீழ் குறிப்பிட்டுள்ள அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் (பணி விதிகள்) சட்டம் 2016, பிரிவு 47(1) ன் படி தற்காலிக அடிப்படையில், அவர்கள் பணி ஏற்கும் நாள் முதல் மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த பணி நிலையில் உள்ள பதவிகளுக்கு பதவி உயர்வு அளித்தும், மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு, தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணி விதி 2 (c) III–ன் கீழ் மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த பணி நிலையில் உள்ள பதவிகளுக்கு பணி மாறுதலில் நியமனமும் வழங்கி பார்வையில் காணும் அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணையில் பதவி உயர்வு / பணிமாறுதல் ஆணை வழங்கப்பட்ட கீழ்கண்ட தலைமையாசிரியருக்கு அன்னாரது பெயருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள பணியிடத்தில் நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது. இப்பணியிடத்தில் உடன் பணியேற்கும்படி அறிவிக்கப்படுகிறது.

| வ. எண் | தலைமையாசிரியரின் பெயர் பணிபுரியும் இடம் திரு/திருமதி | மாவட்டக் கல்வி அலுவலர்/ ஒத்த பணியிடத்தில் நியமனம் செய்யப்படும் இடம் |
|---|---|---|
| 1 | எ.எல்லப்பன்<br>தலைமையாசிரியர்<br>ஏ.கே.டி.நகராட்சி உயர்நிலைப் பள்ளி,<br>காஞ்சிபுரம் | மாவட்டக் கல்வி அலுவலர்<br>காஞ்சிபுரம் |

1. மேற்கண்ட பதவி உயர்வு மற்றும் பணிமாற்றம் முற்றிலும் தற்காலிகமானது எனத் தெரிவிக்கப்படுகிறது.
2. மேற்கண்ட மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் ஒத்த நிலையில் உள்ள பணியிடங்களுக்கான ஊதிய விகிதம் நிலை -23 (ரூ..56,900/ -ரூ.1,80,500/-) ஆகும்.

(த.பி.பா)

3. மேற்கண்ட தலைமை ஆசிரியர் தனது பணியிடப் பொறுப்புகளை அப்பள்ளியின் மூத்த உதவித் தலைமையாசிரியரிடம் ஒப்படைத்துவிட்டு உடனடியாக புதிய பணியிடத்தில் பணியேற்றிட அறிவிக்கப்படுகிறது.
4. சம்பந்தப்பட்ட பள்ளி மூத்த உதவித் தலைமை ஆசிரியர் உண்டியல் ஏற்பளிப்பது உட்பட அனைத்து இதர பொறுப்புக்களையும் மறு ஆணைகள் பிறப்பிக்கப்படும் வரை மேற்கொள்வதற்கு அனுமதித்து ஆணை வழங்கப்படுகிறது.
5. மேற்காணும் தலைமையாசிரியர்கள் ஏற்கனவே மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த பணியிடங்களில் பொறுப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டிருப்பின், அவர்கள், சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலரால் நியமனம் செய்யப்படும் பொறுப்பு அலுவலரிடம் பொறுப்பினை ஒப்படைத்து பணிவிடுவிப்பு பெற்று புதிய பணியிடத்தில் உடனடியாக பணியில் சேர அறிவுறுத்தப்படுகிறார்கள்.
6. மாவட்டக் கல்வி அலுவலர் (பொறுப்பு) நியமனத்திற்கான பின்னேற்பு ஆணை கோரி, தனியே கருத்துரு அனுப்புமாறு சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.
7. சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டது மற்றும் புதிய பணியிடத்தில் பணியில் சேர்ந்தமைக்கு உரிய அறிக்கைகளை உடன் இயக்குநருக்கும் தொடர்புடைய இதர அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்படுகிறது.
8. மேற்கண்ட தலைமையாசிரியர்கள் மீது தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(பி)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் உள்ளதா என்பதையும், அன்னார் தண்டனைக் காலத்தில் உள்ளாரா என்பதையும் சரிபார்த்த பின்னர் பணிவிடுவிக்க வேண்டும் எனவும், மேற்கண்ட நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இருப்பின், அது சார்ந்த விவரங்களை உடன் இவ்வியக்ககத்திற்கு தெரிவிக்க வேண்டும் எனவும் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர் / மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

பள்ளிக் கல்வி இயக்குநர்

24/03/20

பெறுநர்
சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்

நகல் :

சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்
சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்கள்
சார்ந்த கருவூல அலுவலர்கள்
மாநில கணக்காயர், சென்னை–18
அரசு முதன்மைச் செயலாளர் , பள்ளிக் கல்வி (பக1(1)த் துறை, சென்னை–9 அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.